முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 645**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

05.07.2021, திங்கட்கிழமை

1. தவமெனும் சக்திகொண்ட அரங்கா
   தவசியாக வந்த ஞானதேசிகா
   அவனிகாக்க என் அவதாரமாக
   ஆற்றல்பட வந்துபிறந்த குருராஜா
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   தரணியில் உன்தர்மம் நிலைத்துநிற்க
   தக்கபடி உலகமெங்கும் பாதுகாப்பு பெருகி இனிதே
3. இனிதே ஞானயுக மாற்றம்
   இறையருளாக உன்சக்தி வழி இனிதே நடந்தேறும்
   கனிவுகொண்டு உன் கரம்பட தீட்சை பெற்றோர்களெல்லாம்
   கலியுகத்தில் ஞானிகளாகி சிறக்க நேரும்
4. நேர்மைகொண்டு உன் தர்மத்தை  நடத்தும் மக்களெல்லாம்
   நிலவுலகில் நீ தேடுகின்ற ஞானிகள் படைகளாகி
   காலனை வென்று கலியுகத்தில் சிறந்து
   கந்தவேலன் என் ஞான ஆட்சிக்கு வழிவகுக்க நேரும்
5. நேர்மைகொண்டு உந்தன் சக்தியாக உலகில் இணைந்த
   நிலவுலகின் ஆன்மீக உயர்சீடர்களெல்லாம்
   பெருமைமிக்க ஆறுமுகன் என் ஆசியோடு
   பிசகில்லாத ஞானவான்களாக சிறக்க நேறும்
6. சிறக்கவே அரங்கனே கலியின் சிறந்த ஞானியாக
   சுப்ரமணியப்பெருமான் என்அருளால் அவதாரம் நிகழ்த்தப்பட்டிருக்க
   மறுக்காது ஓங்காரக்குடில் நோக்கி வரும் மக்களெல்லாம்
   மரணத்தை வென்று இந்த உலகமாற்ற சேவையில் பங்குகொண்டு
7. பங்குகொண்டு இனிதே பரமசூட்சும
   பரமானந்த சதாசிவசற்குருவின் வழி
   தொண்டர்களாகி இனிதே தேசிகன் தேடுகின்ற வண்ணம்
   தெளிவுமிக்க ஞானிகளாகி சிறக்க நேரும்
8. சிறக்கவே அரங்கன் தயவாலே இந்த மாற்றம்
   சிறப்பாக ஞானயுகமாற்றமாக நடந்தேறும்
   மறுக்காது அரங்கன் வழிவழிதொடர்ந்து வர
   மண்ணுலகம் பெரும் பாதுகாப்பை பெறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—